Vol.1 No. 3 April 2017 e-ISSN: 2456-5571

# பத்துப்பாட்டில் கலைஞர்களின் வாழ்வியல் உரிமைகள்

**முனைவர் ஐ. ஜான்சிராணி**
*அரசர் கல்லூரி, திருவையாறு*

**முன்னுரை**

தமிழின் பழமையையும் பண்பாட்டினையும் விளக்கும் இயல்புடையனவாய்த் திகழ்வன சங்க இலக்கியங்கள். அவற்றுள் நீண்ட தொடர்களாய் அமைந்து இலக்கியத்தின் மேன்மையைப் பறைசாற்றுவன பத்துப்பாட்டு நூல்களாகும். அதனுள் செம்பாதி நூல்கள் ஆற்றுப்படை இலக்கியங்களாய் அமைகின்றன. இவ்விலக்கியங்களின் வழி சங்க காலத்தில் வாழ்ந்த கலைஞர்களாகிய கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோரைப் பற்றி அறியமுடிகின்றது. ஓரிடத்தில் நிலையான வாழ்வினைப் பெறாத இக்கலைஞர்கள் தங்களின் குடும்ப வறுமையைப் போக்கிக் கொள்வதற்காகப் பல இடங்களுக்குச் சென்று தங்களிடம் உள்ள திறமைகளை வெளிப்படுத்திப் பரிசில் பெறுவதற்காக அரசர், வள்ளல் போன்றோரை இன்புறச் செய்தனர். நாடோடிகளாக இடம் பெயர்ந்து செல்லும் கலைஞர்கள் கலைக்காகத் தம் வாழ்வினையே அர்ப்பணித்தனர். இத்தகைய சிறப்புத் தன்மைகளைப் பெற்ற கலைஞர்களின் வாழ்வியல் உரிமைகளைப் பத்துப்பாட்டு நூல்களின் வழி ஆராய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**கலையும் கலைஞர்களும்**

சங்க காலத்தில் கலைத்திறன் மிக்க கலைஞர்கள் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். அக்குழுவில் கூத்தர், பாணர், பொருநர் என்ற ஆண்பாற் கலைஞர்களும் விறலி என்ற பெண்பாற் கலைஞரும் இருந்தனர். உணர்ச்சிக் கலைஞர்களான இந்நால்வரை ஆடற்கலைஞர், பாடல்கலைஞர் என இருவகையாகப் பிரிக்கலாம். ஆடற்கலைஞர் என்ற வரிசையில் கூத்தர், பாணர், விறலியர் போன்றோரும் பாடல் கலைஞரில் பெரிய யாழை வைத்துப் பாடக்கூடிய பெரும்பாணரும், சிறிய யாழையுடைய சிறுபாணரும் அடங்குவர். ஆடற்கலைஞர்களும் பாடல்கலைஞர்களும் இணைந்தே தம் திறமையை வெளிப்படுத்தினர். கூத்தர் என்பார் பாடுவதோடு ஆடவும் செய்யும் கலைஞராவார். கூத்தருக்குச் சாதி வேறில்லை. அவர்களின் கூத்து எண்வகை உணர்ச்சிகளையும் அனைத்து மனக்குறிப்புகளையும் வெளிக்காட்டும் வகையில் அமைந்தது. இக்கூத்தர்கள் கோடியர், வயிரியர், கண்ணுளர் என்னும் பெயர் பெற்றனர். யாழ் என்னும் இசைக்கருவியோடு தம் பாடல்களைப் பாடும் கலைஞர் பாணர் என அழைக்கப்பட்டனர். அவர்தம் நிகழ்ச்சியில் பயன்படுத்திய கருவியைக் கொண்டு அவர்களை அடையாளம் காணமுடியும். பாணர்கள் நன்கு பாடல் இயற்றவும் இசைக்கவும் தெரிந்திருந்தனர். ஆனால் தம் வாழ்வியலுக்கு வள்ளல்களின் ஆதரவையே நம்பியிருந்தனர். பொருநர் என்பவர் கலைஞர் வகையில் ஒருவராவர்.

ஆயினும் இவர்களின் அடையாளம் இதுவெனச் சரியாகக் கூறமுடியவில்லை. பொருநர் என்பதற்கு ஒருவரைப் போன்று வேடமிட்டு நடிப்பவர் என்பது பொருள். இப்பொருநரைப் பிற கலைஞர்களிடமிருந்து வேறுபடுத்தக் கூடிய சிறப்புப் பண்பு அவர்கள் நாட்டின் தலைவர்களோடு கொண்டிருந்த நெருக்கமான உறவாகும். போரிலும் வீட்டிலும் இப்பாணர்கள் அரசர்களின் பரிவாரப் பகுதிகளாக இருந்தனர் என்பது புறநானூற்றின் (பா.382) வழி அறியப்படும் செய்தியாகும். ஆடல், பாடல், கூத்து இவற்றில் சிறந்து விளங்கும் மகளிர்கள் விறலியர் என்று சுட்டப்பட்டனர். எண்வகையான மெய்ப்பாடுகளையும் புலப்படுத்தும் திறமை மிக்கவள் விறலி எனப்பட்டாள். ஒரு பாடலின் பின்னணி இசைக்கேற்ப அடிபெயர்த்துத் தோள்அசைத்து ஆடும் விறலி கூத்துக்கள் நிகழ்த்த வேண்டி இடம்விட்டு இடம்பெயர்ந்து செல்வாள். ஆடற்தொழில் புரியும் ஆடவர் கூத்தர் எனவும் பெண்டிர் விறலியர் எனவும் குறிப்பிடப்பட்டனர். பாடல் பாடுவோரைப் பாடினி என்றும் அரங்கில் நடிப்பாரை விறலி என்றும் பிரித்துப் பேசுவதுண்டு. விறலியரின் அழகினைச் சிறுபாணாற்றுப்படை கேசாதி பாதமாக வருணித்துள்ளது.

**ஆற்றுப்படுத்தும் மரபு**

கலைஞர்கள் தங்களது தனித்த திறமையில் கலை முயற்சியால் அடையாளப் படுத்தப்பட்டனர். அவர்களின் வாழ்க்கை முறை அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கை முறையாகவே இருந்தது. இதனை அடிப்படையாக வைத்தே ஆற்றுப்படை இலக்கியங்கள் தோன்றின. வறுமை காரணமாக அரசனைப் பார்த்துத் தம்திறமைகளை வெளிப்படுத்திப் பரிசில் பெறுவதற்காகக் கலைஞர்கள் தம் இடம்விட்டு வேறுஇடம் பெயர்ந்து செல்வர். அப்போது தம்மைப் போல் வறுமை காரணமாக அரசனை நாடிப் பரிசில் பெற்றுத் திரும்பி வரும் கலைஞர்களைக் காண்பர்.

அவ்வாறு பரிசில் பெற்ற கலைஞர் பரிசில் பெறவிருக்கும் கலைஞரை ஆற்றுப்படுத்துதல் ஆற்றுப்படையாகும். இது நால்வகைக் கலைஞர்களுக்கும் பொருந்துவதாகும். இதனைத் தொல்காப்பியர்,

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
(தொல்.1037)

என்னும் நூற்பாவழி எடுத்துரைக்கிறார். ஆற்றுப்படை என்பது ஒருவரை வழிப்படுத்துதல் என்ற பொருளில் அமைவதாகும். வாழ்க்கையில் இடர் பல உற்ற பின்பு ஒரு வள்ளலிடம் பரிசு பெற்றால், அந்த அரசனிடம் எவ்வாறு செல்வது, அவன் என்ன தருவான் எனப் பல்வேறு செய்திகளைப் பரிசில் பெற்ற கலைஞர் மற்றொரு கலைஞருக்குக் கூறுவதாகும். சங்க காலத்தில் சான்றோர் ஒருவர் பரிசு பெற்றால் யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம் என்னும் பெருநோக்கில் பின்வரும் பலரையும் ஆற்றுப்படுத்துவர். ஆதலால் பலரும் பயன்பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தனர். அதன் அடிப்படையில் அமைந்ததே ஆற்றுப்படை என்னும் மரபாகும்.

**கூத்தரும் கூத்துக்கலையும்**

பல்வேறு வகையான இசைக்கருவிகளை இசைத்துக் கூத்தாகிய நடனம் ஆடியவர் கூத்தர் எனப்பட்டனர். கூத்தர்கள் தான் வழங்கும் கூத்திற்கேற்ப ஒலிகளை எழுப்பியும் கைகளைத் தட்டியும் ஆடினர். இவர் இங்ஙனம் குதித்தது கூத்தாகவும் ஒலிகளை எழுப்பி ஓசையிட்டது இசையாகவும் கைகளைக் கொட்டியது தாளமாகவும் மாறியது. இவ்வாறு கருதப்படும் இசை, கூத்து, நடனம் ஆகிய மூன்றும் சேர்ந்த தொகுப்பே கூத்து அல்லது நடனம் எனப்பட்டது. நன்னனது மலைநாட்டில் மாலையை அணிந்த கோதை மகளிர் ஆடுவதற்கு ஏதுவாக இரவு முழுவதும் முழவை ஒலித்து ஆடித் தங்களது கூத்துக்கலையினை வெளிப்படுத்தினர். இதனை,

குரூஉக்கண் பிணையல் கோதை மகளிர்
முழவுத்துயில் அறியா வியலுள் ஆங்கண்
விழவின் அற்றவன் வியன்கண் வெற்பே
(மலை. 349-351)

என்னும் அடிகள் காட்டுகின்றன. அழகிய மலர்மாலை சூடிய பெண்கள் ஆடுதற்கேற்ப மலைமேலே இருந்தும் கீழே தரையிலிருந்தும் எழும் ஒலிகள் ஒன்று சேர்ந்து மலையாகிய யானையின் பிளிறலாய் ஒலித்தது. நோய்த்தடுப்பு, குறைநீக்கம், வெற்றிக் கொண்டாட்டம்,சமயம் தொடர்பான நிகழ்ச்சிகளில இக்கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டன. கூத்தர்களும் விறலியரும் பாடியும் ஆடியும் மக்களையும் மன்னனையும் மகிழ்வித்தனர். மகளிரும் ஆடவரும் குரவைக் கூத்தாடும் போது பறை என்னும் கருவியை இசைத்துக் கொண்டு ஆடினர். அதுபோலவே துணங்கைக் கூத்தும், வள்ளைக் கூத்தும் ஆடப்பெற்றது. இச்செய்திகளிலிருந்து சங்ககால மக்களிடையே கூத்துக்கலை பெற்ற செல்வாக்கினை அறியமுடிகிறது.

**பாணனின் பயணமும் பரிசில் வாழ்க்கையும்**

யாழை வைத்து மீட்டித் தன் கலையை வெளிப்படுத்துவதில் சிறந்தவர்கள் பாணர்கள். இவர்கள் நாடுதோறும் எல்லா நிலங்களுக்கும் சென்று கலைநிகழ்த்தும் இயல்பினர் ஆவர். தங்கள் குழுவுடனும் துணையுடனும் ஊர் ஊராகச் சென்று புரவர்களை நாடி அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தியுள்ளனர். பாணர்களின் பரிசில் வாழ்க்கையினை இரண்டு பாணாற்றுப்படை நூல்களும் வெகுவாகச் சித்தரித்துள்ளன. பாணர்கள் பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவையைப் போன்ற நாடோடி வாழ்க்கையினர் ஆவர். எப்போதும் ஓடித் திரிதலையே தம் வாழ்க்கையாகக் கொண்டனர். இச்செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை,

பழுமரம் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
(அடி.20-22)

என்னும் தொடர்களின் வழி எடுத்துரைக்கிறது. பறவைகள் பழுமரம் தேர்ந்து பறக்கின்றன. பழம் உண்டபின் அம்முயற்சியினையும் மறந்து மகிழ்ந்து இருக்கின்றன. இக்கலைஞர்களும் அத்தன்மை உடையவர்கள் ஆவர். கரவும் செருக்கும் அற்றுக் கல்வியும் செம்மையும் பெற்று வளமாக வாழும் வள்ளல்களே கலைஞர்கள் நாடும் பழுமரங்களாகத் திகழ்ந்தனர். அவ்வள்ளல்களை அணுகி அவர்களைப் புகழ்ந்து பாடித் தம் கலையை வெபளிப்படுத்தி நல்லுதவி பெற முயல்வார்கள். பரிசினைப் பெற்றதும் மகிழ்ச்சி சிறந்து தம்மை மறந்து கலையின்பத்தை நாடெங்கும் பரப்புவர். நாளை வாழ்க்கையைப் பற்றிய கவலையே அவர்களுக்கு இல்லை எனலாம். கலைஞர்களின் மானத்தை மதித்துப் போற்றும் பண்பாடு வள்ளல்களிடம் அமைந்திருந்தது. கலைஞர்களின் வளர்ச்சிக்கும் கல்விப் பெருக்கத்திற்கும் ஊன்று கோலாய் இருந்தனர். அதனால் கலைஞர்களைக் காக்கும் கடமையுணர்வு மிக்கவர்களாகவும் அவர்களின் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டவர்களாகவும் உணர்வுகளுக்கு நன்கு மதிப்பு அளிப்பவர்களாகவும் வள்ளல்கள் இருந்தனர்.

**பொருநரின் இசைத்திறம்**

ஒருவர் போல வேடமிட்டுப் பாடி நடிப்பவரைப் பொருநர் என்பர். உணவிற்குக் கூட வழியில்லாத கலைஞர்கள் அன்று ஏராளம் இருந்துள்ளனர். தங்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத கலைஞர்களின் வறுமை மேலும் வருத்தத்தைத் தரக் கூடியதாக விளங்கியது. இத்தனை வறுமை நிலையிலும் அவர்தம் கலையினை வளர்த்தனர் என்பது போற்றத்தக்கது. தாம் இசைக்கக் கூடிய யாழிசையால் வழிப்பறி செய்யும் கள்வரின் கொடிய தன்மையினையும் மாற்றக்கூடிய இசைத்திறம் உள்ளவர்களாகக் கலைஞர்கள் விளங்கினர். இதனைப் பொருநராற்றுப்படை,

ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மறுவின் பாலை
(அடி.21-22)

என்னும் அடிகளின் வழி வெளிப்படுத்துகிறது. பொருநரின் யாழின் இசையைக் கேட்டு வழிப்பறி தொழிலைச் செய்யும் கள்வர் தம்முடைய கொலைத் தொழிலுக்குரிய படைக்கலன்களைக் கைவிட்டு அருள்நெறியின் மறுதலையாகிய மறநெறியினின்று அருள்நெறிக்குப் படருமாறு செய்யும் தன்மையினைப் பெற்றனர். இத்தகைய இசைத்திறம் உடையவர்களாகப் பொருநர்கள் விளங்கியமை அவர்தம் கலைத்திறனுக்குச் சான்றாக அமைவதாகும்.

**விறலியரின் கலைவெளிப்பாடு**

இசைக்கலையினையும் ஆடற்கலையினையும் திறம்பட வெளிப்படுத்தும் பெண்டிர் விறலியர் என அழைக்கப்பட்டனர். பாணர் மனைவி பாடினி என்று அழைக்கப்பட்டது போல கூத்தனின் மனைவி விறலி என்று அழைக்கப்பட்டாள். விறலியர் ஆடுதல், பாடுதல் மட்டுமின்றி இசைக்கருவிகளை இசைப்பதிலும் திறம் பெற்றவர்களாக இருந்தனர். முழவில் மார்ச்சனை இடுதல், யாழிலே பண்ணை நிறுத்துதல், பெருவங்கியத்தை இசைத்தல், சல்லியை வாசித்தல், சிறுபறை அமைத்தல், பதலையை மெல்லக் கொட்டுதல் போன்றவற்றை விறலியர் அறிந்திருந்தனர். இவர்கள் தம் கலைத்திறனை மன்னனிடம் காட்டி அவன் புகழ் பாடிப் பரிசில் பெற்றனர். அரசனிடம் தம் கலைகளில் புகழ்பெற்ற இப்பெண்கள் பிற்காலத்தில் தங்கள் நிலையினை இழந்தனர். பெண்ணின் திறமையும் ஆற்றலும் புறந்தள்ளப்பட்டு அவர்களின் புறத்தோற்றம் நுகர்பொருளாக முன் வைக்கப்பட்டது. விறலியானவள் மருதப்பண்ணை கரிய தண்டினையுடைய சிறிய யாழின் நரம்பினது ஓசைக்கு மேற்போகாமல் இசைத்துப் பாடிப் பின்பு ஆடித் தன் கலைத்திறனை வெளிப்படுத்தினாள். இதனைப் பெருங்கௌசிகனார்,

மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீது இறவாது உடன்புணர்ந்து ஒன்றிக்
கடவது அறிந்த இன்குரல் விறலியர்
(மலை.534-536)

என்னும் தொடர்வழிக் காட்டுகிறார். இசையை வாழ்வாகவும் வாழ்வை இசையாகவும் நினைத்து வாழ்ந்தவள் விறலி ஆவாள். சிறந்த கலைஞர்களின் சுற்றத்தினரோடு வாழ்ந்து மிடற்றிசையாலும் கருவியோசையாலும் இசைத்து மக்களை மகிழ வைத்தாள்.

**முடிவுரை**

ஒருநாட்டின் உயிர்நாடியாகத் திகழ்வது கலையாகும். அக்கலையினை வெளிப்படுத்துவதற்காகத் தம் வாழ்வினையே அர்ப்பணித்தவர்கள் கலைஞர்கள். வறுமையும் வளமையும் கலந்ததுதான் வாழ்க்கை என்ற தத்துவத்தை உணர்ந்த இக்கலைஞர்கள் பழுமரம் தேடும் பறவை போன்ற கவலையற்ற வாழ்க்கையினை வாழ்ந்தனர். தாம் சென்று இரந்து பாடிய மன்னர்களையும் அவர்தம் சிறப்புகளையும் பாடித் தம் கலைத்திறனை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் எதிர்ப்பட்ட கலைஞரையும் ஆற்றுப்படுத்தும் உயரிய நோக்கில் கலைஞர்கள் வாழ்ந்துள்ளனர். வறுமையில் வாடிய கூத்தர் முதலான நால்வகைக் கலைஞர்களுக்கும் கொடைப் பொருள் வழங்கி அவர்களைச் சிறப்பித்த மன்னர்கள் போற்றுதலுக்குரியவர்கள் ஆவர். கலைஞர்களின் உழைப்பைத் தவிர்த்து அவர்களைப் பிச்சை எடுக்கும் சாதாரண மனிதராய்ப் பார்க்கும் போக்கு மேலோங்கிய போதே கலைவளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது. இவர்களைப் போன்ற கலைஞர்களை ஊக்குவித்து அக்கலைகளை மீட்டுருவாக்கம் செய்வது எதிர்கால வாழ்விற்கு வித்தாக அமையும்.

**துணைநின்ற நூல்கள்**

1. பத்துப்பாட்டு, நச்சினார்க்கினியர் உரை.
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர் உரை.
3. பி.சேதுராமன், ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல்.
4. மா.ராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி.
5. நா.கதிரைவேற் பிள்ளை, தமிழ்மொழி அகராதி.